விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25

ஒலி 067 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 12 சனிக்கிழமை (24.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே




### யாழில் மாபெரும்
## உயர்கல்வி கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நான்காவது முறையாகவும் இடம்பெறவுள்ள மாபெரும் உயர்கல்வி கண்காட்சியானது இன்று மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங் ▷15

## கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது
### இந்தியப் பக்தர்கள் பங்கேற்கவில்லை



▷15


### சாவகச்சேரியில்
## விபரீத முடிவெடுத்த யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பகுதியில் 18 வயதான யுவதியொருவர் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.

டச்சு வீதியில் உள்ள குறித்த ▷15

### சமரசத்துக்கு இணங்காவிட்டால்
# வழக்குகளை எதிர்கொள்ள தமிழரசுக் கட்சி முடிவு
### ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்



*(கிளிநொச்சி)* தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களுக்கு எதிரான வழக்கு தொடுநர்கள் சமரசத்துக்கு இணங்காவிட்டால் வழக்குகளை எதிர்கொள்வதாக தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

*(02ஆம் பக்கம் பார்க்க)*

### கட்டுநாயக்கவில்
## யாழ்.,வவுனியாவை சேர்ந்த இருவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் யாழ்ப்பாணம், வவுனியாவைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோசடியான முறையில் தயாரிக்கப்பட்ட கிரேக்க சுற்றுலா விசாக்களைப் பயன்படுத்தி ஐரோப்பாவுக்குச் செல்வதற்காகக் கட்டுநாயக்க ▷15

### அச்செழுவில் வீடு புகுந்து
## சகோதரர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்செழு பகுதியில் சகோதரர்கள் மீது வன்முறைக் கும்பல் ஒன்று வீடு புகுந்து தாக்குதல் நடத்தியதோடு வீட்டில் இருந்த பொருட்களையும் சேதப்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். ▷15

## வெள்ளை ஈ தொற்று பளையிலும் பரவுகிறது

(பளை)

பளைப் பிரதேசத்தில் உள்ள தென்னைகளிலும் வெள்ளை ஈக்கள் பரவத் தொடங்கியுள்ளதாக தென்னந்தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் தென்னைகளை அழித்து வரும் வெள்ளை ஈக்களின் தொற்றால் யாழ்ப்பாணத்தில் கணிசமான தென்னை மரங்கள் அழிவடையும் கட்டத்தில் உள்ளன.

இந்நிலையில் பளையில் ஏக்கர் ▷15

### விகாரைக்குரிய இடம் எனத் தெரிவித்து
## திருமலையில் பொங்கல் நிகழ்வை தடுத்து நிறுத்திய படையினர்

(திருகோணமலை)

திருகோணமலை, தென்னமரவடி கந்தசாமி மலை முருகன் ஆலயத்தில் மாதாந்த பௌர்ணமி தின பொங்கல் நிகழ்வில் ஈடுபட முயன்ற பொது மக்கள், முப்படையினரால் தடுத்து நிறுத்தப் ▷15



## இலங்கையின் பொருளாதாரத்துக்கு தொடர்ந்து உதவி வழங்கப்படும்
### அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர்




(கொழும்பு)

பொருளாதார செழுமைக்காக அமெரிக்க உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் என அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் வர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு நேற்று வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் பிரதி இராஜாங்க ▷15

## பஸ்ஸின் மிதி பலகையிலிருந்து தவறிவிழுந்த இளைஞன் பலி
### நல்லூர் ஆலயம் முன் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் பஸ்ஸின் மிதிபலகையிலிருந்து இறங்க முற்பட்ட இளைஞர் ஒருவர் தவறிவீழ்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1977 ஆம் ஆண்டு இந்து கௌரவ குடும்பம் அரச தொழில் புரிந்து தற்பொழுது லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம். நேரில் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை.

(19249)

**076 63 63 028**

## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு கணனி ரைப்பிங் செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை. சகல விபரங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

(19248)

**077 728 6050**

செல்வா ரெலி கொமினிகேசன்
124, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

ராஜ பாதை வீதி , கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது. (19251)

**075 970 1948**

## காணி விற்பனைக்கு

"கொற்றிக்கல்லைக்காடும், கொற்றிக்கல்லு வயலும் கொற்றிக்கல்லுலைக்காடும் மேற்கும்" எனும் பெயருடைய பருத்தித்துறை வீதியிலிருந்து 850 மீற்றர் தூரத்தில் புத்தூர் கிழக்கு எனும் முகவரியில் காணி விற்பனைக்குண்டு.

(19250)

**077 306 8993**


## வழக்குகளை...

தமிழரசுக் கட்சியில் இதுவரை இயங்கிய மத்திய குழு உறுப்பினர்கள் தமக்குள் ஆலோசனை கூட்டம் ஒன்றை நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடத்தினர்.

மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற குறித்த கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களுக்கு எதிராக வழக்குகளைத் தொடுத்துள்ள கட்சி உறுப்பினர்களிடம் வழக்குகளை வாபஸ் பெறக் கோருவது என்றும், நிபந்தனை இல்லாமல் வழக்குகளைக் கை வாங்க அவர்கள் இணங்காவிட்டால், தொடர்ந்து வழக்குகளை எதிர்கொள்வது என்றும் தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் கூடி முடிவெடுத்தனர்.

இந்தக் கூட்டத்திலேயே வழக்கை எதிர்கொண்டு நீதிமன்ற கட்டளைப்படி விடயங்களை முன்னெடுப்பது என முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

வழக்காளிகளுடன் பேசுவதற்கு இதுவரை கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இருந்த வைத்தியர் ப.சத்தியலிங்கம், முன்னாள் மட்டக்களப்பு மேயர் தி. சரவணபவன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலாதன் ஆகியோர் கொண்ட குழு நேற்றைய கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் பங்குபற்றவில்லை. அவர்களுக்கு எதிராகக் காரசாரமான கருத்துக்கள் கூட்டத்தில் பங்குபற்றிய சிலரால் முன்வைக்கப்பட்டன.

வழக்குகளைச் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் சமரசமாக தீர்க்கும் கருத்தியல் நேற்றைய கூட்டத்தில் பிரதிபலிக்கவில்லை. வழக்காளிகள் நிபந்தனையின்றி வழக்குகளைக் கை வாங்காவிட்டால் சட்டப் போராட்டம் நடத்தத் தயார் என்று உறுதியாக பேசப்பட்டது. (ம-7.316)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் திருநெல்வேலி தலங்காவில் பிள்ளையார் கோவில் அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**


- குடியிருப்பு சூழவுள்ள பகுதி.
- தரகர் தேவையில்லை.
- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

தொடர்புகளுக்கு :

**071 173 3911**
**076 853 5022**

(19246)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



எமது குடும்பத் தலைவர்

### அமரர் ஏரம்பு வேல்முருகு

மலர்வு : 19.01.1959 உதிர்வு : 07.03.2023

அவர்களின் சிவப்பேறு குறித்த ஆண்டு திவச கிரியைகள் இன்று (24.02.2024) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

"திக்கம்பதி"
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

மனைவி மகாதேவி, உடன் பிறப்புக்கள் மற்றும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(C-8403)

076 700 5863

# மரண அறிவித்தல்



## சந்தனராசா சிறீலதா

**தாயின் மடியில் : 21.05.1961**
**இறைவன் அடியில் : 21.02.2024**

எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சந்தனராசா சிறீலதா அவர்கள் கடந்த 21.02.2024 (புதன்கிழமை) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிறிஸ்கந்தராசா - சரஸ்வதிதேவி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் சந்தனராசாவின் அன்பு மனைவியும் தர்மசீலன் (லண்டன்), ஜெயசீலன் (லண்டன்), கேமலதா (சுவிஸ்), காலஞ்சென்ற பிறேமலதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பராசக்தி, துரைசிங்கம், நவரத்தினம், பாக்கியநாதன், கமலநாதன், பத்மநாதன், செல்வநாதன், திசைநாதன், பூபதி, சுதா, ஜெயந்தா, கண்ணன், சுரேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரதீப் (கனடா), பிரகாஸ் (லண்டன்), பிரசாந்தி (ஜேர்மனி), பிரசாந் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மிரியம், பிரவீனா, சுபாஸ்கரன், நிருஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் எரிசன் ஆதித், நிசான், கிசாரா, யஸ்வின், யதுசா, யஸ்விகா, காருண்ஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ராமியன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பாடசாலை வீதி,
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

(19245)

தகவல்:
குடும்பத்தினர்
077 711 1925

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடன் மறுசீரமைப்புக்கு பின்னரும் இலங்கை பல சிரமங்களை எதிர்கொள்ளும்

## இறையாண்மை கடன் ஆராய்ச்சியாளர் மையம்

**(வோஷிங்டன்)**
**கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு பின்னரும் இலங்கை கடன் சுமையால் பல சிரமங்களை எதிர்கொள்ளும் என உலகளாவிய இறையாண்மை கடன் ஆராய்ச்சியாளர் தியோ மெரிட் தெரிவித்துள்ளார்.**

அரசாங்க பொது நிதிக் குழுவின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவித்த போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு இலக்குகள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2022இல் இலங்கை குறைந்த வருமானம் பெறும் நாடாக தரமிறக்கப்பட் டது.

அத்துடன், கடன் மறுசீரமைப்பின் பின்னரான காலப்பகுதிகளில் இலங்கையின் கடன் சுமை மற்றும் மறுநிதியளிப்பு அபாயம் என்பவற்றை குறைப்பதற்கு நிதிக் கொள்கைகள் மற்றும் கடன் முகாமைத்துவக் கொள்கைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதை இலங்கை முன் மாதிரியாக கொண்டு செயற்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (5-6)

# போதைக்கு அடிமையான 1500 சிறுவர்கள் சிறையில்

## சிறைச்சாலை ஆணையாளர்

(கொழும்பு)
சிறைச்சாலையில் உள்ளவர்களில் 65 வீதமானவர்கள் போதைப்பொருள் பாவனை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் ஜகத் சந்தன வீரசிங்க தெரிவித்துள்ளார்.

காலி நாகொட பிரதேசத்தில் உள்ள பாட சாலை ஒன்றில் நடைபெற்ற வைபவம் ஒன் றில் கலந்து கொண்ட போது சிறைச்சாலை ஆணையாளர் ஜகத் சந்தன் வீரசிங்க இதனை தெரிவித்தார்.

இதேவேளை போதைப் பொருள் குற்றங்களுக் காக 1000 முதல் 1500 வரையான சிறுவர்கள் சிறைச் சாலையில் உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (5-6)

# இரவு நேர பொருளாதாரத்தின் மூலம் அந்நிய செலாவணியை அதிகரிக்க முடியும்

## டயனா கமகே

(கொழும்பு)
இரவு நேரப் பொருளாதாரத்திற்கு மாறுவதன் மூலம் நாட்டின் அந்நிய செலாவணியை 70 சத வீதம் வரை அதிகரிக்க முடியும் என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரக் கூடிய இடங்கள் தொடர்பாக தற்போதுள்ள சட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் திருத்தியமைத்துத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

இரவு நேர பொருளாதாரம் தொடர்பில் சில தரப்பினர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தாலும் உலகின் பல நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இரவு நேரப் பொருளாதாரம் முக்கிய பங்காற்றுவதாகவும் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்துள்ளார். (5-6)

# மின்கட்டண குறைப்பு தொடர்பில் அடுத்த வாரம் முடிவு

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

PUCSL

(கொழும்பு)
மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பான தீர்மானம் எதிர்வரும் வாரத்தில் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பான முன்மொழிவை இலங்கை மின்சார சபை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆணைக்குழுவில் சமர்ப்பித்து இருந்தது. பிரேரணையை ஆராய்ந்து தரவுகளின் உண்மைச் சரிபார்ப்பின் பின்னர் அடுத்த வாரத்திற்குள்இலங்கை மின்சார சபைக்கு பரிந்துரை [illegible] பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அண்மையில் தெரிவித்திருந்தார்.

உள்நாட்டு மத வழிபாட்டுத் தலங்கள் அரசு அலுவலகங்கள், சுற்றுலா விடுதிகள் ஆகியவற்றுக்கான உயர்த்தப்பட்ட மின் கட்டணம் அதே அளவு குறைக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். (5-6)

# செய்தித்துளிகள்

## 30 மில்லியன் முட்டைகள் இறக்குமதிக்கு அனுமதி



(கொழும்பு)
பண்டிகைக் காலத்திற்காக இந்தியாவில் இருந்து மேலும் 30 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு இடையில் 60 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டதாக வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அதன்படி அதன்படி 90

## வாகனங்களை இறக்குமதி செய்ய திட்டம்

(கொழும்பு)
சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கு தேவையான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான பிரேரணை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அதற்கமைய சுமார் 1,000 வான்களையும் மகிழுந்துகளையும் இறக்குமதி செய்யும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் குறித்த பிரேரணைக்கு அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் அனுமதி கிடைக்கப்பெறும் என எதிர்பார்ப்பதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (5-6)

## பேருந்து விபத்து 8 பேர் படுகாயம்

(கொழும்பு)
நானுஓயா ரடெல்ல குறுந்தொகை வீதியில் பேருந்து ஒன்று நேற்று முன்தினம் மாலை கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் எட்டு பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறை பிரதேசத்தில் இருந்து சிவனொளிபாதமலை நோக்கி பயணித்த பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

பேருந்தில் சென்ற எட்டு பேர் பலத்த காயங்களுடன் பொதுமக்கள் மற்றும் பொலிஸாரின் உதவியோடு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# யாழ்.பல்கலையில் இடம்பெற்ற கரம்தொடரின் போட்டி முடிவுகள்



யாழ்.பல்கலைக்கழக அனைத்து மாணவர்களுக்கும் இடையிலான திறந்த பிரிவின ருக்கான ஆண்கள், பெண்களுக்கான ஒற்றையர், இரட்டையர் மற்றும் கலப்பு ஆட்டங்களின் கரம் தொடர் அண்மையில் யாழ்.பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் 1ஆம் இடத்தை தொழில்நுட்ப பீட மாணவி ஆர். பவதாரணி, 2ஆம் இடத்தை கலைப்பீட ஆர். ரஜிதா, 3ஆம் இடத்தை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் எச்.எம்.எஸ். நிமேசிகா ஆகியோரும் பெற்றனர்.

ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் 1ஆம் இடத்தை விவசாய பீட மாணவன் வி.கிருசாந்தன், 2ஆம் இடத்தை விஞ்ஞான பீட மாணவன் ரி.எம்.ரி.பி. திலகரத்ன, 3ஆம் இடத்தை விஞ்ஞான பீட மாணவன் எம். றேகன் ஆகியோரும் பெற்றனர்.

பெண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் 1ஆம் இடத்தை ஆர். பவதாரணி, ஆர். ரஜிதா,

2ஆம் இடத்தை ஜீ. விஜேசிறி, எம். பானுயா, 3ஆம் இடத்தை எச்.எம்.எஸ். நிமேசிகா, ஏ. நண்டசிறி ஆகியோரும் பெற்றனர்.

ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் 1ஆம் இடத்தை டி. ஏ.கே. உடயங்க, ரி.எம்.ரி.பி. திலகரட்ண, 2ஆம் இடத்தை எம் ராகுல், ட.பி.எம். லியனகே, 3ஆம் இடத்தை எம்.ஏ.ஏ. இஷான், எம்.ரேகன் ஆகியோரும் பெற்றனர்.

மற்றும் கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் 1 ஆம் இடத்தை டி. ஏ.கே. உடயங்க, எச்.எம்.எஸ். நிமேசிகா, 2ஆம் இடத்தை எம்.ராகுல், எஸ். பிரியதர்சினி, 3ஆம் இடத்தை ஆர். றொஷான், ஆர். தூரிகா ஆகியோரும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3046

### நவீன்

நம்ம வாழ்க்கை எதை நோக்கி பயணிக்குதுனே தெரியல...




போற வரை பின்னாடியே போவோம்...

### சரண்யா

தப்பை "தப்பு" இல்லாமல் செஞ்சா "தப்பு" எப்போதும் தப்பாகாது...



"தப்பை" "தப்பு" "தப்பா" செஞ்சா "தப்பு" எப்போதும் தப்புதான்...

### பாலா

பசி என்ற இரண்டு எழுத்துக்காக எழுந்து...



பணம் என்ற மூன்றெழுத்துக்காக ஓடுவதே வாழ்க்கை..!

### டினா

நல்லவங்கள ஆண்டவன் ரொம்ப சோதிப்பான்..




அவங்களுக்கு அது பழகிடுச்சின்னு அப்படியே விட்டுவான்..

### மது

வாழ்க்கையில நம்மை ஆபத்தில காப்பாத்த ஒருத்தன் கூட வரமாட்டான்...



ஆனா, நம்மை கடுப்பேத்த மட்டும் ஒவ்வொருத்தனா வந்துகிட்டு இருப்பானுங்க...

### தருண்

சேர்ல உட்கார்ந்து பாத்துருப்பீங்க..
சேரே உட்கார்ந்து பாத்துருக்கீங்களா...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத்தில் தண்டாயுதபாணி உற்சவம் நேற்று முன்தினம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

# ஜெனிவா செல்லவுள்ள அலி சப்ரி தலைமையிலான குழு

(கொழும்பு)

இணையவழி பாதுகாப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவற்றை நாட்டில் அமுல்படுத்துவதற்கு தீவிர முயற்சிகளை அரசாங்கம் எடுத்துள்ள நிலையில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடரின் போது அவை கவனத்தில் கொள்ளப்படுமென மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடர் நாளை மறுதினம் 26 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்கள், மார்ச் மாதம் 4 ஆம் திகதி கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதன்போது ஆணையாளரின் வாய்மூல விளக்கமளிப்பும் இடம்பெறவுள்ளது.

கூட்டத்தொடரில் கலந்து கொள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டக்குழுவொன்று மார்ச் முதல் வாரத்தில் ஜெனிவா செல்ல உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

# உணவு தவிர்ப்பு போராட்டத்தில் குதித்த இராமேஸ்வர மீனவர்கள்

(இராமேஸ்வரம்)


எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இலங்கையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐந்து மீனவர் களையும் உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் சாகும் வரையான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இன்று காலை முதல் இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தங்கச்சிமடத்தில் இடம்பெற்ற அவசர கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து இலங்கை கடற்பகுதிக்குள் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான மீனவர்களில் ஐவருக்கு நீண்ட நாட்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# சந்தையில் அதிக விலைக்கு விற்கப்படும் அரிசி

## நுகர்வோர் குற்றச்சாட்டு




(கொழும்பு)

விவசாயிகளிடம் நெல் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்படுகின்ற போதிலும் கட்டுப்பாட்டு விலையை விடவும் அதிக விலைக்கு சந்தையில் அரிசி விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதேவேளை, கட்டுப்பாட்டு விலைக்கு அமைய, ஒரு கிலோ கிராம் கீரிச் சம்பா அரிசி 260 ரூபாவுக்கும் சம்பா அரிசி 230 ரூபாவுக்கும் நாடு அரிசி 220 ரூபாவுக்கும் அதிகூடிய சில்லறை விலையில் விற்பனை செய்யப்பட வேண்டும்.

எனினும் கட்டுப்பாட்டு விலையை விடவும் அதிக விலைக்கே அரிசி விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். (5-6)

# ஐ.ம.ச இணைந்த முன்னாள் இராணுவ தளபதி



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகே ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

அதன்படி அவர் நேற்று வெள்ளிக்கிழமை எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து ஐக்கிய மக்கள் சக்திக்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

இந்நிலையில் அவர் ஊழல் எதிர்ப்பு கொள்கை மற்றும் அமுலாக்கல் பிரிவின் பிரதானியாகவும் எதிர்க்கட்சியின் ஊழல் எதிர்ப்புப் பயணத்தின் ஆலோசகராகவும் சஜித்பிரேமதாஸவால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# இராசிபலன்

24.02.2024
மாசி 12, சனிக்கிழமை
பூரணை முன்னிரவு 6.39 மணிவரை
மகம் முன்னிரவு 10.55 மணிவரை

சுபநேரம் -3.30-5.00 மணிவரை
இராகுகாலம்-9.30-11.00 மணிவரை
அமிர்தசித்தம், மாசி மகம், பூரணைவிரதம்

சந்திராஷ்டமம்
பூராடம், உத்தராடம்.

வளவன்




அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும்.




காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.




நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, புதிய அனுபவங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




சுபவிரயங்களில் தாராளம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை.




எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.




தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், உதாசினப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், புதிய முயற்சிகள் கைகூடும்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தினரிடையே தேவையற்ற முரண்பாடுகள் தோன்றி மறையும்.




மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.




சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

பேசுவதற்கு மட்டுமல்ல கேட்பதற்கும் ஆர்வம் கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் - கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:-சிவசாந்தன்)

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் உற்சவங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் மகா சிவராத்திரி தினமான 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுதினம் சனிக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை கண்டகி தீர்த்தக் கடற்கரையில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளதாக ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ ந.குமாரசுவாமிக் குருக்கள் அறிவித்துள்ளார். (5-6)

# நகை திருட்டில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழாவில் நகைத் திருட்டில் ஈடுபட்ட இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றபோது பெருமளவான பக்தர்கள் ஆலயத்தில் கூடியிருந்தனர்.

இதனை சாதகமாக பயன்படுத்தி நகைத் திருட்டில் ஈடுபட்ட கொழும்பு கொச்சிக்கடை பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து நான்கரை பவுண் தாலி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் இருவரையும் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (5-6-33)

# 'பணுவில்-9' இதழுக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து வருடந்தோறும் பணுவில் இதழினை 2015 ஆண்டு முதல் வெளியிட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இவ்வருடமும் பணுவில் -9 எனும் பெயரில் வெளியிட உள்ளது.

பல்சுவை ஆண்டிதழாக வெளிவரும் இம்மலருக்காக பிரதேசம் சார் தொல்லியல், வரலாறு, ஆன்மிகம், சமூகவியல், மானிடவியல், கலைமரபுகள், வாழ்வியல், மரபுரிமைகள், வழக்காறுகள் மற்றும் பொது விடயங்கள் சார் ஆவணப்படுத்தல்கள் சார்ந்த ஆக்கங்கள் ஆய்வுக் கட்டுரைகளாகவும் கட்டுரைகளாகவும் பக்தி எழுத்துக்களாகவும் புனைகதைகளாகவும் கவிதைகளாகவும் வரவேற்கப்படுகின்றன.

ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் 30.04.2024 ஆம் திகதிக்கு முன்பதாக பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், சங்கானை என்னும் முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (5-6)



இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் வடபிராந்திய சங்கத்தினரால் நடத்தப்பட்ட "தொழில்நுட்ப வழிகாட்டி" நூல் வெளியீட்டு விழா, வடமாகாண பிரதம செயலாளர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# கட்டுப்பாட்டை இழந்த வாகனம் மதிலுடன் மோதி விபத்து

## நுணாவிலில் சம்பவம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் மகேந்திரா ரக வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் காணப்பட்ட மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி [illegible] களை ஏற்றிக்கொண்டு பயணித்த வாகனமே இவ்வாறு கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது தெய்வாதீனமாக எவருக்கும் பலத்த காயங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 200 | 350 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 120 | 150 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 700 | 500 | 800 | 450 |
| தக்காளி | 600 | 650 | 550 | 700 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 200 | 140 |
| கோவா | 400 | 420 | 450 | 500 | 300 |
| கரட் | 600 | 600 | 400 | 700 | 500 |
| பூசணி | 200 | 250 | 140 | 300 | 180 |
| புடோல் | 200 | 150 | 100 | 250 | 130 |
| வாழைக்காய் | 200 | 250 | 120 | 250 | 180 |
| சின்ன வெங்காயம் | 200 | 250 | 200 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 360 | 450 | 280 | 400 | 300-380 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 400 | 400 |
| வெண்டக்காய் | 400 | 300 | 150 | 450 | 280 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 150 | 140 |
| பயற்றங்காய் | 200 | 300 | 250 | 400 | 600 |
| லீக்ஸ் | 350 | 250 | 380 | 500 | 350 |
| பீற்றூட் | 300 | 350 | 300 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 700 | 450 | 800 | 550 |
| முருங்கைக்காய் | 1400 | 1200 | 1000 | 1500 | 1400 |
| போஞ்சி | 350 | 350 | 450 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 170 | 180 | --- |
| கீரை – 1 பிடி | 80 | 100 | 50 | 80 | 50 |
| தேசிக்காய் | 150 | 300 | 120 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 90 | 70-100 | 50-100 |
| இராசவள்ளி | 320 | 400 | 300 | 400 | 350 |
| வெங்காயப்பூ | 180 | 120 | 180 | 300 | 120 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 200 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 90 | 80 | 120 |
| வல்லாரை | 60 | 50 | 40 | 80 | 80 |
| [illegible] | 100 | 150 | 80 | 250 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TIN இலக்கம் தொடர்பில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

(கொழும்பு)

வரி பதிவுக்கான வரி அடையாள இலக்கம் அல்லது TIN இலக்கம் வழங்குவது தொடர்பான யோசனை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் போது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை TIN இலக்கமாக பயன்படுத்துவதற்கு அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பிரேரணை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அத்துடன் ஆறு நிறுவனங்களிட மிருந்து பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை நான்கு நிறுவனங்கள் பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (5-6)

# சட்டவிரோத இலத்திரனியல் சிகரெட்டுக்கள் பறிமுதல்

## சந்தேகநபர் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு இணைய வழி ஊடாக சட்டவிரோதமான முறையில் இலத்திரனியல் சிகரெட்டுகளை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் வலையமைப்பை ஜா-எல கலால் பிரிவினர் சுற்றிவளைத்துள்ளனர்.

இதன்போது, 25 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

30 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஈ -சிகரெட் கையிருப்பு இதன்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் அரசாங்கத்திற்கு 10 கோடி ரூபாய் வரி வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஜா-எல கலால் அத்தியட்சகர் பிரமேஸ் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

"சிகரெட்டை விட இது அதிக போதை ஏற்படுத்தக்கூடியது.

ஈ-சிகரெட் புகைப்பதை உங்களால் கண்டுபிடிக்க கூட முடியாது. வெவ்வேறு வாசனைகள் வெளியேறுகின்றன. இதுபோன்ற வாசனை உங்கள் பிள்ளைகளிடம் இருந்து வந்தால் தயவுசெய்து கண்டுபிடிக்கவும். இந்த ஈ-சிகரெட்டுகள் வெவ்வேறு வழிகளில் தயாரிக்கப்படுகின்றன.

சில சமயங்களில் கையில் கட்டப்படும் ஸ்மார்ட் கடிகாரத்தின் வடிவில் இருக்கும். தெளிவாக அடையாளம் காண முடியாத வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது" எனவும் தெரிவித்தார். (5-6)

# கச்சதீவு திருவிழாவிற்கு யாழ்.குறிக்கட்டுவானிலிருந்து ஆரம்பமான படகுப் பயணம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவில் பங்கேற்கும் பக்தர்கள் யாழ்.குறிக்கட்டுவானில் இருந்து தமது பயணத்தை நேற்று ஆரம்பித்திருந்தனர்.

ஏற்கனவே பதிவு செய்த பக்தர்களுக்காக படகுசேவை முன்னெடுக்கப்பட்டது.

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா நேற்று ஆரம்பமானது.

திருவிழாவில் பங்கேற்பதற்காக இலங்கையில் இருந்து நான்காயிரம் பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# பல்கலைக்கழக மானியத்திற்கு பதிலாக புதிதாக நிறுவவுள்ள ஆணையம்

## உயர்கல்வி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

பல்கலைக்கழக மானியக் குழுவிற்குப் பதிலாக தேசிய உயர்கல்வி மேம்பாட்டு ஆணையத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலம் மார்ச் மாத இறுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்கு முன்னதாக இந்த சட்டமூலம் குறித்து விவாதம் நடத்த எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் புதிய ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

குடியரசுத் தலைவர் மற்றும் அரசியலமைப்புச் சபையால் நியமிக்கப்பட்ட 11 உறுப்பினர்களை இந்த ஆணையம் உள்ளடக்கும் என்று மாநில அமைச்சர் ராகவன் தெரிவித்தார். (5-6)


# நோயாளர் நலன்புரிச் சங்கம்
## ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழை

**சிற்றுண்டிச்சாலை மற்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் குத்தகைக்கு வழங்குவதற்கான ஒப்பந்த விலைமனுக்கோரல்- 2024/2025**

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை மற்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் என்பவற்றுக்கு தகுதியான தகைமை வாய்ந்த நடத்துநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளைக் கோருகின்றது.

**சிற்றுண்டிச்சாலை,சைக்கிள் பாதுகாப்பு நிலையம் 20.04.2024-19.04.2025**

| பெறுகை விபரம் | பெறுகை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வி பணம்(மாதாந்தம்) |
|---|---|---|
| சிற்றுண்டிச்சாலை (புற்றுநோய் விடுதி கட்டட தொகுதி முன்பாக) | BH/ PWS/ Canteen/2024 | எழுபதயிரம் ரூபாய் (70000/=) |
| சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | BH/PWS Cycle park 2024 | ஐம்பதயிரம் ரூபாய் (50000/=) |

**ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்க முடியாத கேள்விப்பத்திரக் கட்டணம்.**
**1.சிற்றுண்டிச்சாலை கேள்விப் பத்திர கட்டணம்-2000/=**
**2. சைக்கிள் பாதுகாப்பு நிலைய பத்திரக் கட்டணம்- 1000/=**

1. தகுதி வாய்ந்த அனுபவமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இது சம்பந்தப்பட்ட மேலதிக தகவல்களை அலுவலக நேரத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
2. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் "Application for bid Documents" என்ற படிவத்தை பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 01.03.2024 தொடக்கம் 14.03.2024 வரையான காலப் பகுதியில் மு.ப 8.00 மணி தொடக்கம் பி. ப 4.00 மணிவரை பெற்று பூர்த்தி செய்து 20.03.2024 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்குள் கிடைக்கக் கூடியதாக விலைக்கேள்விகள் எமது வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெறுகை பெட்டியில் கிடைக்கக் கூடியவாறு இடப்படல் வேண்டும்.
அன்றைய தினம் பி.ப 3 மணிக்கு கேள்விகள் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.
3. விலைக்கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதி கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்கலாம்.
4. கிடைக்கப்பட்ட விலைக்கேள்விகளை ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ அல்லது முழுமையாக இரத்து செய்வதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையாக அதிகாரம் உள்ளது.

(9233)

**வைத்திய அத்தியட்சகர், தலைவர்,**
**நோயாளர் நலன்புரிச்சங்கம்**
**ஆதார வைத்தியசாலை,தெல்லிப்பழை.**
**மேலதிக தகவல்களுக்கு-074 120 0115**


# வவுனியா விபுலானந்தா கல்லூரிக்கு மைதானம் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை

## திலீபன் எம்.பி

(குருமன்காடு)

வவுனியா, பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரிக்கு மைதானம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் கொண்டுவரப்படவுள்ளதாகவும் மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள காணி ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சென்று அவருடன் கலந்துரையாடியமை தொடர்பில் கடந்த புதன்கிழமை கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,


மாவட்டத்தில் உள்ள முதன்மையான பாடசாலைகளில் ஒன்றாகிய விபுலானந்தா கல்லூரியில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்ற போதும் 70 வருடமாக மைதானம் இல்லாது குறித்த பாடசாலை பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வந்தது.

மைதானத்தைப் பெறுவதற்கு பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில் இதுவரை மைதானம் கிடைக்கவில்லை. இந்நிலையில் குறித்த பாடசாலைக்கு என மைதானம் அமைக்க காணியினை பெறுவது தொடர்பில் காணி ஆணையாளர் நாயகத்துடன் கலந்துரையாடினேன். விரைவில் அமைச்சரவை பத்திரம் ஒன்றினை சமர்ப்பித்து அதனூடாக மைதானத்திற்கான காணியை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார் எனத் தெரிவித்தார். (5-6-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியாவில் ட்ரோன் மூலம் தேநீர் விநியோகம்



(டில்லி)

இந்தியாவில் ஹோட்டல் ஒன்று ட்ரோன் மூலம் தேநீர் விநியோகித்து புதிய சாதனை படைத்துள்ளது.

அப்பனா பார்க் ஹோட்டல் என்ற பெயரில் கொல்கத்தாவில் அமைந்துள்ள ஒரு ஹோட்டல், ட்ரோன் மூலம் தேநீர் விநியோகிக்கும் புதிய முயற்சியை தொடங்கியுள்ளது.

வாடிக்கையாளர்கள் ஹோட்டலின் ஆப் மூலம் தங்களுக்கு பிடித்த காபியை ஆர்டர் செய்யனாம்.

ஆர்டர் பெறப்பட்டவுடன், ட்ரோன் GPS மற்றும் A1 தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஹோட்டலில் இருந்து புறப்பட்டு, வாடிக்கையாளர் குறிப்பிட்ட இடத்திற்கு தேநீரை கொண்டு செல்லும்.

ட்ரோன் டெலிவரி தொழில்நுட்பம் இன்னும் ஆரம்ப கட்டத்தில் இருந்தாலும் இதற்கு எதிர்காலத்தில் மிகப்பெரிய வளர்ச்சி இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.

ட்ரோன்கள் மூலம் உணவு, மருந்துகள் மற்றும் பிற பொருட்களை விரைவாகவும் திறமையாகவும் டெலிவரி செய்ய முடியும்.

இதன் மூலம், நகரின் போக்குவரத்து நெரிசல் மற்றும் சுற்றுச் சூழல் மாசுபாடு குறையும் என சில வாடிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (5-6)

# ஈரான்-ரஷ்யாவுக்க

# 3 ஆம் உலகப் போரு

## அச்சத்தில் உலகத்

(மொஸ்கோ)

**மனித அழிவை ஏற்படுத்தும் வகையில் ஈரா ரஷ்யாவுக்கு ஏவுகணைகளை வழுங்கும் காரியமா மூன்றாம் உலகபோருக்கு வழி ஏற்படுத்துமோ எ அச்சம் உலகத்தலைவர்கள் மத்தியில் ஏற் ருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெ டுள்ளன.**

ஈரான் ஏவுகணை உள்ளிட்ட 400இற்கு மேற் பட்ட அதிபயங்கர ஆயு தங்களை வழங்கவுள்ளது.

இந்த ஏவுகணைகள் 300 முதல் 700 கிலோ மீற்றர் வரையில் தொலைவிலுள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டவை.

கடந்த ஆண்டின் இறுதியில் தெஹ்ரான் மற்றும் மொஸ்கோவில் ஈரான் மற்றும் ரஷ்ய இராணுவம் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இடையே இடம் பெற்ற கலந்துரையாடல்களின் போது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் பின்னர் இவ்வாண்டு முதல் ஏவுகணை ஏற்றுமதி ஆரம்பமாகியது என ஈரானிய இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கரீபியன் கடல் வழியா கவும் விமானம் மூலமாகவும் ஏவுகணைகள் ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்டதாகவும் ஈரான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஐ.நா பாதுகாப்புச் சபை ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணை ஏற்றும திகளுக்கு ஈரானுக்கு எதிராக தடை விதித்திருந்தது.

## 'சூப்பர் சோனிக்' ஏவுகணைகளை கொள்வனவு செய்யவுள்ள இந்தியா

(டில்லி)

இந்திய கடற்படைக்கு ஒலியை விட மூன்று மடங்கு வேகத்தில் செல்லும் பிரமோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணைகள் வாங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.




சுமார் ரூ.19 ஆயிரம் கோடி செலவில் 200 இற்கும் மேற்பட்ட பிரமோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களை வாங்குவதற்கு அமைச்சர்கள் குழு அனுமதி வழங்கியுள்ளது.

இது குறித்து அதிகாரிகள் தெரிவிக்கையில் "இந்தியா-ரஷ்ய கூட்டு முயற்சியான பிரமோஸ் ஏரோ ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட், நீர்மூழ்கிக் கப்பல்கள், கப்பல்கள், விமானங்கள் மற்றும் தரைத் தளங்களில் இருந்து ஏவக் கூடிய சூப்பர் சோனிக் குரூஸ் ஏவுகணைகளை உற்பத்தி செய்கிறது.

பிரமோஸ் என்று அழைக்கப்படும் இந்த ஏவுகணைகள் ஒலியை விட 3 மடங்கு வேகத்தில் பறக்கும்.

இத்தகைய வலிமை மிக்க 200 பிரமோஸ் ஏவுகணைகளை இந்திய கடற்படைக்கு வாங்க மத்திய அரசு ஒப்பு தல் அளித்துள்ளது.

ஏவுகணைகளை வாங்குவதற்கான முறையான ஒப்பந்தம் அடுத்த சில மாதங்களில் உறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தனர். (5-6)

## ரஷ்யா மீது அமெரிக்கா

(வோஷிங்டன்)

ரஷ்யாவின் மீது மேலும் பல பொருளாதார தடைகளை அமெரிக்கா விதிக்கவுள்ளதாக திறைசேரியின் பிரதித் தலைவர் வொலி அடேஜிமோ ரொயிட்டஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையானது ஏனைய கூட்டணி நாடுகளுடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் ரஷ்ய இராணுவ உற்பத்தி தொழிற்றுறை மற்றும் வேறு

## நிலவில் தரையிறங்கிய 'ஒ

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் தனியார் நிறுவனம் ஒன்று அனுப்பிய விண்கலம் வெற்றிகரமாக நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கியுள்ளது.

சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக அமெரிக்காவுக்கு சொந்தமான ஹூஸ்டன் நகரிலுள்ள தனியார் நிறுவனம் அனுப்பிய ஒடிஸியஸ் விண்கலம் தான் இப்போது நிலவில் வெற்றிகரமாகத் தரையிறங்கியுள்ளது.

நாசாவின் நிதியுதவியுடன் அனுப்பப்பட்டுள்ள இந்த விண்கலத்தில் நிலவு குறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

# க்கான ஆயுத உதவி

# ாருக்கு வழிவகுக்கும்

## கத் தலைவர்கள்

**இல் ஈரான்,**
**ரியமானது**
**மோ என்ற**
**ல் ஏற்பட்டி**
**வெளியிட்**



தது.

இந்த தடையானது கடந்த வருடம் ஒக்டோபரில் நீக்கப்பட்டது. இருப்பினும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன ஈரானின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவு கணை திட்டத்தின் மீதான தடைகளைத் தக்கவைத்துக் கொண்டது.

உக்ரைனுக்கு எதிரான மொஸ்கோவின் போரில் பயன்படுத்துவதற்காக வட கொரியா சமீபத்தில் ரஷ்யாவிற்கு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் ஏவு கருவிகளை வழங்கியதாக வெள்ளை மாளிகை குற்றம் சாட்டியிருந்தது.

இதுதொடர்பில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி தெரிவிக்கையில் வட கொரியாவிலிருந்து ஏற்கனவே பெறப்பட்ட ஏவுகணைகளுக்கு மேலதிகமாக, ஈரானிடம் இருந்து குறுகிய தூர பாலிஸ்டிக் ஆயுதங்களை ரஷ்யா கொள்வனவு செய்வதற்கு முயற்சி களை மேற்கொண்டு வருவதாக அறிய முடிகின்றது என தெரிவித்திருந்தார். (5-6)

# மாலைதீவை சென்றடைந்த சீன உளவுக் கப்பல்



(மாலே)

இந்திய பெருங்கடல் வழியாக நுழைந்து சியாங்யாங் ஹாங் 3 என்ற சீன உள வுக்கப்பல் மாலைதீவை நோக்கி சென்றுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த கப்பலானது நேற்று முன்தினம் மாலைதீவை சென்றடைந்துள்ளது.

இந்நிலையில் பாதுகாப்பு கருதி இந்திய கடற்படை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. ஆராய்ச்சிக்காக மட்டுமே கப்பல் சென்றுள்ளதாக சீனா அரசாங்கம் தெரிவித்துள்ளது.


ஆராய்ச்சிக்காக மாலைதீவு வந்துள்ள இந்த கப்பல் 4,300 தொன் எடை உடைய தெனவும் இப்பகுதியில் ஏற்படக்கூடிய எதிர்கால இயற்கை பேரிடருக்கான சாத்தியக் கூறு கள் அப்பகுதியில் நீர்மூழ்கிக் கப்பல்களை இய க்குவதற்கான வசதிகள் பற்றிய தகவல்களை சேகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (5-6)

# க்கா பொருளாதார தடை

நாடுகளில் அமையப் பெற்றுள்ள உற்பத்தி தொழிற்சாலைகளை இலக்கு வைத்து சுமார் 500 மேற்பட்ட விடயங்களுக்கு தடை விதிக்கவுள்ளதாகவும் வொலி அடேஜிமோ மேலும் தெரிவித்தார்.

ரஷ்யா, உக்ரையின் மீது போர் தொடுத்து சுமார் இரண்டு வருடங்கள் ஆகியுள்ள நிலையில் மேலும் பொருளாதார தடை விதிக்கப்படவுள்ளது. (5-6)

# ய 'ஒடிஸியஸ்' விண்கலம்



ஆய்வு செய்யப் பலவகை ரோபோக்கள் உள்ளன.

முதற்கட்டமாக நிலவில் தரையிறங்கிய அந்த விண்கலத்தில் இருந்து லேசான சிக்னல் கிடைப்பதாக நாசா ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அறுகோணவடிவில் அமைந்துள்ள இந்த விண்கலம் நிலவின் அருகே சென்றதும் தனது வேகத்தைப் பல மடங்கு குறைத்துள்ளது. பிறகு ஒரு மணி நேரத்திற்கு மிக மெதுவாகச் சென்ற அந்த விண்கலம் சந்திரனின் தென் துருவத்திற்கு அருகே தரையிறங்கியது. (5-6)

# உலகின் உயரமான ஆணும் குள்ளமான பெண்ணும் சந்திப்பு



(வோஷிங்டன்)

உலகின் மிக உயரமான ஆணும் மிகவும் குள்ளமான பெண்ணும் அமெரிக்காவின் கலிபோர்னியாவின் இர்வினில் நேரடியாக சந்தித்துள்ளனர்.

உலகின் மிகவும் உயரமான ஆணாக அறியப்படுபவர் சுல்தான் கோசன். அதே போன்று உலகின் மிகவும் குள்ளமான பெண்ணாக அறியப்படுகிறார் ஜோதி ஆம்கே. இவர்கள் இருவரும் கடந்த புதன்கிழமை அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நேரடியாக சந்தித்துள்ளனர்.

இருவருக்கும் இது முதல் சந்திப்பல்ல. 6 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்தில் இதே போன்ற சந்திப்பில் இருவரும் ஒன்றாக பங்கேற்றுள்ளனர். எகிப்து பிரமிட்டுகள் முன்பாக இருவரும் தோன்றும் புகைப்படங்கள் இன்றளவும் பகிரப்பட்டு வருகின்றன.

கின்னஸ் உலகச் சாதனை ஆவணங்களின்படி, இருவருக்கும் இடையே ஆறடிக்கும் அதிகமான உயர வித்தியாசம் உள்ளது. 2009 ஆம் ஆண்டில் கோசன் 8 அடி 3 அங்குல உயரம் கொண்ட உலகின் மிக உயரமான மனிதராக சாதனை படைத்தார். அதே ஆண்டு ஆம்கேக்கு உலகின் "உயரம் குறைந்த பதின்ம வயதுப் பெண்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. அப்போது 15 வயதான ஆம்கே உயரம் 2 அடி 0.3 அங்குலமாக இருந்தது. அடுத்ததாக ஆம்கேக்கு 18 வயதாகும் போது, மீண்டும் அளவிடப்பட்டபோது அவரது உயரம் 2 அடி 0.7 அங்குலம் என்பதாக இருந்தது. இதன் மூலம் ஆம்கே உலகின் உயரம் குறைந்த பெண் என்ற சாதனையை படைத்தார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் 40 ஆயிரம் போலி மருத்துவர்கள்

## அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**நாடு முழுவதிலும் 40,000 இற்கும் அதிகமானோர் மருத்துவர்களை போல் பாவனை செய்து வருவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இவ்வாறான வைத்தியர்கள் ஆபத்தான நிலையில் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

சில சந்தர்ப்பங்களில் மருத்துவ உதவியாளர்கள், தாதியர்கள் அல்லது துணை மருத்துவ சேவைகளில் அங்கம் வகிக்கும் ஒருவர், மருத்துவர்களாகக் காட்டிக் கொண்டு அவர்களின் கிராமத்திலோ அல்லது சொந்த ஊரிலோ நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பது கண்டறியப்பட்டதாக மருத்துவர் விஜேசிங்க தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் சுகாதார அமைப்பிற்குள், ஒரு நோயாளிக்கு மருந்துகளை பரிந்துரைக்கும் அறிவும் பொறுப்பும் மற்றும் அதிகாரமும் ஒரு மருத்துவருக்கு மட்டுமே உண்டு என்றும் அவர் தெரிவித்திருந்தார். (5-6)

## 1 மில்லியன் மின் இணைப்புகள் இரத்து

### காமினி வலபொட


(கொழும்பு)

கடந்த ஓராண்டில் 1 மில்லியன் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. துண்டிக்கப்பட்ட இணைப்புகளை உடனடியாக மீளப் பெற்றுத் தருமாறும்,

மின்சாரக் கட்டணத்தை தவணை முறையில் செலுத்தும் முறைமையை நடைமுறைப்படுத்துமாறும் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட வலியுறுத்தியுள்ளார்.

மறு இணைப்புக் கட்டணத்தை வசூலிக்காமல் இணைப்புகளை மீட்டெடுக்க வேண்டும் என்றும், மறு இணைப்புக் கட்டணத்தை தவணை முறையிலும் வசூலிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (5-6)

## ஹயஸ்- லொறி விபத்து 7 பேர் காயம், ஒருவர் பலி



(கொழும்பு)

கந்தளாய் -அழுத் ஓயா பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன் ஏழு பேர் படுகாயமடைந்துள்ள நிலையில் கந்தளாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த பெண் கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கிண்ணியா நோக்கி வந்து கொண்டிருந்த ஹயஸ் வாகனம் எதிர்த்திசையாக மணல் ஏற்றிக் கொண்டு வந்த லொறியுடன் மோதியதினாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் கல் ஓயா பொலிஸார் தெரிவித்தனர். (5-6)

## சுகாதார அமைச்சின் அதிகாரிகளை சந்திக்கவுள்ள சங்க பிரதிநிதிகள்

(கொழும்பு)

தொழிற்சங்க பிரதிநிதிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சுகாதார அமைச்சின் பிரதி நிதிகளை சந்தித்து தமது கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

உத்தேச கொடுப்பனவுக்கான செலவு மற்றும் செலுத்தும் திறன் ஆகியவற்றை கணக்கிடுவதற்கான அறிக்கை தயாரிக்கப்பட உள்ளதாக கூட்டணியின் இணை அழைப்பாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

சுகாதார தொழிற் சங்கக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் சுகாதார அமைச்சின் பிரதிநிதிகளால் இந்த அறிக்கை தயாரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த அறிக்கையை தொகுத்ததன் பின்னர் கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் நிதியமைச்சகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என தர்மவிக்ரம தெரிவித்தார். (5-6)

## இன்று ஒரு தகவல் 46



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

### படிப்பும் பட்டறிவும்

இந்த உலகத்தில படித்து தெரிந்து கொள்வது கொஞ்சம்! பட்டுத் தெரிந்து கொள்வது கொஞ்சம்!

தெரிந்து கொள்ளாமல் இருப்பது ஏராளம்.பாடம் படித்தேன் என்று சொல்வதற்கும் பாடம் கற்றேன் என்று சொல்வதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு அல்லவா? அந்த ஆள் படிப்பதற்காக ஒரு புத்தகம் கொடுத்தேன். ஆனால் நான் பாடம் கற்றுக்கொண்டேன் என்றார். இவர் எப்படி என்று கேட்டார்.

கொடுத்த புத்தகம் திரும்பி வரவில்லை. அதனாலே யாரிடமும் புத்தகத்தை கடன் கொடுக்க கூடாது என்று பாடம் கற்றுக்கொண்டேன் என்றார்.

அனுபவம் என்பது படிப்பை விட மனதிலே அழுத்தமாக பதிய வேண்டிய ஒன்று!

சில விடயத்தை படிப்பதோட நிறுத்திக்கொள்ள வேண்டும். நெருப்பு சுடும் என்று ஒரு புத்தகத்தில் படித்து விட்டு அதை அனுபவித்து பார்க்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு அதைப்போய் தொட்டுப்பார்த்துக் கொண்டு நிற்க கூடாது.

சில விடயத்தை படிப்போட நிறுத்திக் கொள்ளக் கூடாது. நீச்சல் கலையை பற்றித் தெரிந்து கொள்ளுகிறேன் என்று சொல்லிக் கொண்டு அது சம்பந்தமாக ஒரு புத்தகத்தை வாசித்து முடித்து விட்டு நீச்சல் போட்டியிலே கலந்து கொள்வதற்கு நான் தயார் என்று சொன்னால் எப்படி?

ஒருத்தருக்கு சமைக்க தெரிந்து கொண்டு மனைவியிடம் சவால் விடணும் என்று ஒரு ஆசை. உடனே ஒரு சமையல் புத்தகத்தை வாங்கினார். வாங்கினதை விழுந்து விழுந்து படித்தார்.

மனைவி கோயில் செல்லும் நேரம் பார்த்து படித்ததை பரிசோதனை செய்ய ஆரம்பித்தார். புத்தகத்திலே சொல்லியிருக்கிறபடி எல்லாம் உள்ளிட்டு எதையோ ஒன்றை தயார் செய்து முடித்தார்.

சாப்பிடுவதற்கு முயற்சி செய்தார். வாயிலே வைக்க முடியவில்லை! என்ன செய்வது என்று தெரியாமல் முழித்து கொண்டு இருந்தார். வெளியே சென்ற மனைவி திரும்பி வந்தாங்க. நடந்ததை புரிந்து கொண்டார்.

ஏங்க சமைச்சதை சாப்பிட வேண்டியது தானே. ஏன் அதை பார்த்துக்கொண்டு இருக்கிறீங்க என்று கேட்டார். அதற்கு இவர் எப்படி சமாளித்தார் தெரியுமா?

புத்தகத்தில் சமைச்சுப் பார் என்று தான் சொல்லி இருக்குது. சாப்பிட்டுப் பார் என்று சொல்லவில்லையே. அதனாலே அதனை சமைத்து விட்டு பார்த்து கொண்டு உட்கார்ந்து கொண்டு இருக்கிறேன் என்று சொன்னாராம்.

இதை எல்லாம் எதற்கு சொல்ல வருகிறேன் என்று சொன்னா படிப்பு முக்கியம்தான். இருந்தாலும் அதை விட அனுபவம் முக்கியம். இந்தக் காலத்தில் படிப்பாளிகள் பலர் அனுபவசாலிகளுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுப்பதில்லை.

ஒரு ஆற்றிலே ஒரு வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டு இருந்தது. ஓடத்திலே ஏறி அக்கரைக்கு போவதற்காக ஒருத்தர் காத்துக்கொண்டு இருந்தார்.

அவர் ரொம்ப படித்தவர். அது மட்டும் இல்லை. அதிகமாக படித்தவர் என்ற நினைப்பும் உள்ளவர். ஓடம் வந்து சேர்ந்ததும் ஏறி உட்கார்ந்தார்.

ஓடக்காரன் வள்ளத்தை தள்ள ஆரம்பித்தான். தண்ணியிலே மிதந்து போய்க்கொண்டு இருந்தது ஓடம். இவர் மெதுவாக அந்த ஓடக்காரனிடம் பேச்சு கொடுத்தார். என்னப்பா தம்பி நீ இதிகாசம் எல்லாம் படித்து இருக்கின்றாயா என்று கேட்டார்.

அவர் படித்து இருக்கிறாராம் அதனாலே கேக்குறார்!

இல்லை என்றான் ஓடக்காரன். ஐயோ பாவம் உன் வாழ்க்கையில் 1/4 பங்கை நீ வீணாக்கி விட்டியே என்று கூறினார்.ஓடக்காரன் கவலைப்படாமல் ஓடத்தை தள்ளுவதிலே குறியாக இருந்தான். இவர் மறுபடியும் கேட்டார். தம்பி நீ புராணங்களாவது படித்து இருக்கியா என்று கேட்டார். அதற்கும் அவன் இல்லை என்றான். ஐயோ பாவம் உன் வாழ்க்கையில் 1/2 பங்கை வீணாக்கி விட்டாய் என்று கூறினார்.

கொஞ்ச நேரம் ஆச்சு! மறுபடியும் கேட்டார். ஏம்பா நீ இலக்கணம் இலக்கியம் ஏதும் படிக்கவில்லையா என்று கேட்டார். படிக்கவில்லை என்று சொன்னான் அவன். ஐயோ பாவம் உன் வாழ்வில் 3/4 பங்கை வீணாக்கி விட்டாய் என்று சொன்னார்.ஓடம் இப்போது நடு ஆற்றிலே போய்க் கொண்டு இருந்தது. திடீரென்று ஒரு சுழல்.

ஓடம் இப்போது சுழலில் சிக்கி மூழ்க ஆரம்பித்து விட்டது. இப்ப அந்த ஓடக்காரன் அவரை பார்த்து கேட்டான்.ஏங்க பெரியவரே! உங்களுக்கு நீச்சல் தெரியுமா என்று கேட்டான். ஐயையோ! தெரியாதே என்றார் அவர்.

ஐயோ பாவம் உங்களின் வாழ்க்கை முழுவதையும் வீணாக்கி விட்டீர்களே என்று கூறிக்கொண்டு ஆற்றில் குதித்தான். கிடு கிடு என்று நீந்தி போய் கரை ஏறி விட்டான்.

இந்த இடத்தில் படித்த படிப்பு கரை சேர உதவவில்லை . அனுபவம் தான் உதவி இருக்கிறது. அதனாலே படிப்பு அனுபவத்திற்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி, காப்புறுதி பத்திரம் இன்றி சாரத்தியம் ரூ.30,000 தண்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பளை பகுதியில் வரிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் என்பன இல்லாது வாகனம் செலுத்தியவருக்கு முப்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வரிப் பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் இன்றி பயணம் செய்த ஒருவரை கைது செய்த பளைப் பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் பி.ஆர்.ஐ ஜெமில் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது இவ்வாறு தண்டபணம் விதிக்கப்பட்டு சாரதி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (5-6-315)

# மக்கள் எதிர்ப்பால் நிறுத்தப்பட்ட மணல் அகழ்வு

(மன்னார்)

தலைமன்னார் இறங்குதுறை பகுதியில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வுப் பணிக்கு அப்பகுதி மக்களால் நேற்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது.




அப்பகுதிக்கு வருகை தந்த மணல் பரிசோதனை குழுவினர் தாங்கள் ஒரு ஒப்பந்த நிறுவனம் என்று தெரிவித்துள்ளதோடு, எதிர்ப்பினை வெளியிட்ட பொது மக்களுக்கும் தமது ஒப்பந்தத்தினை காண்பித்துள்ளனர்.

எவ்வித அனுமதி இன்றியும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படாமலும்தான் மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்காக குறித்த குழுவினர் வருகை தந்துள்ளனர் என பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவமானது அங்கு பெரும் பதற்றமான சூழலை ஏற்படுத்திய நிலையில், தலைமன்னார் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்து நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்டனர்.

எனினும், மக்கள் இதற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்ட நிலையில், மணல் அகழ்விற்காக வருகை தந்திருந்த குழுவினர் அங்கிருந்து வெளியேறினர்.

இந்த சம்பவம் தொடர்பாக தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-6-285)

# தடம்புரண்ட பாரவூர்தி



(கண்டாவளை)

கிளிநொச்சி ஏ-35 வீதியின் பரந்தன் பகுதியில் பாரவூர்தியொன்று நேற்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

முல்லைத்தீவிலிருந்து பரந்தன் நோக்கி பயணித்த பாரவூர்தி ஒன்று உள்வீதியில் இருந்து பிரதான வீதிக்கு வேகமாக வந்தேறிய மோட்டார் சைக்கிளுக்கு வழிவிட முற்பட்ட சமயம் குறித்த பாரவூர்தி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது எவருக்கும் பாதிப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை. விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-6-315)

# புதையல் தோண்டிய நால்வர் கைது

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் நேற்று வீதி திருத்த வேலைக்காக மண் அகழ்வதாக கூறி புதையல் தோண்டிய 4 பேரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளதுடன் வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

புதுமாத்தளன் பகுதியிலுள்ள வீட்டுகாணி ஒன்றில் 4 பேரடங்கிய குழுவினர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பக்கோ இயந்திரம், டிப்பர் ரக வாகனம் என்பனவற்றையும் கைப்பற்றியுள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (5-6-299)

# விசுவமடுவில் தென்னை மரங்களை சேதப்படுத்திய காட்டுயானைகள்

(தருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு நாச்சிக்குடா பகுதியில் நேற்று முன்தினம் இரவு மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த காட்டுயானைகள் 10 க்கு மேற்பட்ட தென்னை மரங்களை அழித்துச்சென்றுள்ளது.



பெரும் போக அறுவடை முடிந்த பின்னர் மக்கள் குடியிருப்புகளில் மக்கள் வாழ்வாதாரத்திற்காக வைக்கப்பட்டு உள்ள பலன் தரக்கூடிய நிலையில் உள்ள தென்னைகளை நாளாந்தம் வந்து அழித்து வருவதால் இரவுவேளைகளில் அச்ச நிலையில் யானைகளுக்காக காவல் காக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் மின்சார வேலி அமைப்பதற்காக பொருட்கள் போடப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையிலும் இதுவரையில் அமைக்கப்படாது கிடப்பில்போடப்பட்டுள்ளது. (5-6)

# கடந்த 5 ஆண்டுகளில் வவு.67 யானைகள் பலி

## வன ஜீவராசிகள் திணைக்களம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 வரை 67 யானைகள் பலியாகியுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக செட்டிகுளம், நெடுங்கேணி, வவுனியா உட்பட வனத்தினை அண்மித்த பகுதிகளிலில் அனுமதியற்ற சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கியும் வெங்காய வெடி, துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மற்றும் புகையிரத விபத்துக்களாலும் இவை பலியாகியுள்ளன.

மேலும் 5 வயது தொடக்கம் 40 வயதுடைய யானைகளே இவ்வாறு பலியாகியுள்ளன. இதேவேளை இவ் வருடம் இதுவரை 3 யானைகள் பலியானதுடன், கடந்த வருடம் 17 யானைகள் வரை பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# ஆபத்தான நிலையில் உள்ள மரக்கிளையை அகற்றுங்கள்

## தேவிபுர மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு தேவிபுரத்தில் ஆபத்தை விளைவிக்க கூடிய வகையில் உள்ள மரக்கிளை ஒன்று அகற்றப்படாமல் உள்ளது. கடந்த 17 ஆம் திகதி தேவிபுரம் பகுதியில் வீதியில் தொங்கிக் கொண்டிருந்த ஆமைரக் கிளையில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார்.

இந்நிலையில் ஒரு வாரமாகியும் விபத்துக்கு காரணமான மரக்கிளை அகற்றப்படாமலே உள்ளது. குறித்த மரக்கிளையினை அகற்றுவதற்கான முயற்சியில் கிராம அலுவலர், கிராம பொது அமைப்புகள் ஈடுபட்டுள்ளனர்.

மரக்கிளையினை அகற்றுவதன் மூலமே இன்னொரு விபத்தினை தடுப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. மரக்கிளையினை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேவிபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-350)



தருமபுரம் நெத்தலி ஆறு முத்து மாரியம்மன் ஆலய தேர்த் திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம் பெற்றது. (படம்- தேவானந்தம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 414





கடைசியில் கரடி இறந்து விழுந்தது. இளைஞன் அந்தப் பெண்ணை நெருங்கி வந்தான். அவளுக்குத் தன் நன்றியைத் தெரிவித்தான். ஆனால் அவள் மறுமொழி சொல்லாமல் கண்ணீர் விட்டாள். பிறகு அவள் ஓடிப்போய்த் தன் தந்தையை அழைத்து வந்தாள். வந்த வலைஞன் தன் பெண் பேச முடியாத ஊமை என்பதைத் தெரிவித்தான். இராஜகுமாரன் முதலில் வருத்தப்பட்டான். பிறகு வருத்தம் நீங்கி அவளுடன் சிநேகம் செய்து கொண்டான். காட்டு மலர்களைக் கொய்து மாலை தொடுத்து அவள் கழுத்தில் போட்டான். இருவரும் கை கோத்துக்கொண்டு காட்டில் திரிந்தார்கள்.

ஒருநாள் பெரிய மரக்கலம் ஒன்று அந்தத் தீவின் சமீபம் வந்தது. அதிலிருந்து பல வீரர்கள் இறங்கி வந்தார்கள். இராஜ குமாரனைக் கண்டு பிடித்து அவனுக்கு வணக்கம் செலுத்தினார்கள். அவனை மரக்கலத்துக்கு வரும்படி வருந்தி அழைத்தார்கள். இராஜகுமாரன் அந்தப் பெண்ணுக்கு ஆறுதல் கூறி விடை பெற்றுக் கொண்டான். கப்பலில் ஏறிச்சென்றான். அந்தப் பெண் அவன் போன பிறகு ரொம்பவும் வருத்தப்பட்டுக் கண்ணீர் பெருக்கினாள். அதை அவள் தகப்பன் பார்த்தான். ஒரு படகில் அவளை ஏற்றிக் கொண்டு கடல் கடந்து சென்றான். கலங்கரை விளக்கம் ஒன்றை அடைந்து கரையில் இறங்கினான். அங்கே ஒரு குடும்பத்தார் தகப்பனையும் மகளையும் வரவேற்றார்கள். எல்லோருமாக மாட்டு வண்டியில் ஏறிப் பிரயாணம் போனார்கள். கோட்டை மதில் உள்ள ஒரு பட்டணத்தை அடைந்தார்கள். அங்கே அரண்மனை மேன்மாடத்தில் இராஜகுமாரன் தலையில் கிரீடத்துடன் நின்றான். அவனைச் சூழ்ந்து ஆடை அலங்காரங்கள் புனைந்த பலர் நின்றார்கள். அதைப் பார்த்த இந்த இளம் பெண்ணின் மனம் கலங்கியது. அவள் ஒரே ஓட்டமாக ஓடினாள். கடற்கரையை அடைந்தாள். கலங்கரை விளக்கத்தின் மேலேறிக் கீழே குதித்தாள். அலைகள் அவளைத் தாங்கிக் கொண்டன. படகில் வந்த ஒருவன் அவளைத் தூக்கிப் படகில் ஏற்றிக் காப்பாற்றினான். அவளைப் பேய் பிடித்திருக்கிறதென்று எண்ணி ஒரு கோயிலில் கொண்டு போய் விட்டான். கோயில் பூசாரி அவளுக்கு விபூதி போட்டு வேப்பிலை அடித்தான்.

யாரோ ஒரு பெரிய ராணி சுவாமி தரிசனம் செய்ய அந்தக் கோயிலுக்கு வந்தாள். பூசாரி அந்தப் பெண்ணைப் பற்றி ராணியிடம் சொன்னான். ராணி கர்ப்பந் தரித்திருந்தாள். அந்தப் பெண்ணும் தன்னைப் போலவே கர்ப்பவதி என்று அறிந்தாள். பல்லக்கில் ஏற்றிக்கொண்டு அரண்மனைக்கு அழைத்துப் போனாள். அரண்மனைத் தோட்டத்தில் அந்தப் பெண்ணுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. ராணி வந்து இரண்டு குழந்தைகளில் ஒன்றைத் தான் வளர்ப்பதாகச் சொன்னாள். முதலில் வலைஞர் பெண் அதை மறுத்தாள். பிறகு யோசித்துப் பார்த்தாள். இரண்டு குழந்தைகளுமே அரண்மனையில் வளரட்டும் என்று தீர்மானித்தாள். குழந்தைகளை விட்டுவிட்டு நள்ளிரவில் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப்போய் விட்டாள். வெகுகாலம் காட்டில் திரிந்து கொண்டிருந்தாள். ஆனால் குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அடிக்கடி வந்து விடும். ஆற்றங்கரை ஓரமாக வந்து மரங்களின் மறைவில் ஒளிந்திருப்பாள். படகில் ராஜாவும் ராணியும் குழந்தைகளும் வருவார்கள். தூரத்திலிருந்தபடியே பார்த்து விட்டுப் போய்விடுவாள். ஒரு சமயம் ஒரு குழந்தை படகிலிருந்து தவறி விழுந்து விட்டது. அதை யாரும் கவனிக்கவில்லை. இவள் நீரில் மூழ்கிக் குழந்தையை எடுத்துக் கொடுத்தாள். உடனே மீண்டும் நதி வெள்ளத்தில் மூழ்கிச் சென்று அக்கரையை அடைந்து காட்டில் மறைந்து விட்டாள்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## கவலைப்படாதே சகோதரா



காட்டில் பலசாலியான ஒரு சிங்கம் இருந்தது. ஆனால், அது எப்போது பார்த்தாலும் கவலைப் பட்டுக் கொண்டே இருந்தது.

"எனக்கு இவ்வளவு பலம் இருந்தும் இரும்பு போன்ற நகங்களும் பற்களும் இருந்தும் என்ன உபயோகம்? கேவலம் இந்தக் காட்டுச் சேவல் கூவுகிற சத்தம் என்னை நடுங்க வைக்கிறது. இப்படிப் பயந்து கொண்டே வாழ்வது ஒரு வாழ்க்கையா? என்று தன்னைத் தானே நொந்து கொண்டபடி இருந்தது.

அதே சமயம், அங்கே ஒரு யானை வந்தது.

அது மிகவும் கவலையுடன் தன் காதுகளை முன்னும் பின்னும் அடித்துக் கொண்டே நகர்ந்தது.

அதைப் பார்த்த சிங்கம், "ஏய்.. ஜம்போ! உனக்கு என்ன கவலை? யாருமே உன்னை எதிர்த்து ஃசண்டை போட மாட்டார்களே. உன் உடலைப் பார்த்தாலே, எல்லா விலங்குகளும் பயந்து ஓடுமே. எதற்காக நீ கவலை யோடு இருக்கிறாய்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது.

அதற்கு யானை, "இதோ என் காது பக்கத்தில் பறக்கும் குளவியைப் பார்த்தாயா? இது என் காதுக்குள் நுழைந்து கொட்டி விட்டால், அவ்வளவு தான்.என் உயிரே போய்விடும். அதற்காகத்தான் இது காதுக்குள் போய்விடாதபடி, காதுகளை ஆட்டிக் கொண்டு கவலையோடு நடக்கிறேன்" என்றது.

அது கேட்டு சிங்கம்யோசித்தது. "இவ்வளவு பெரிய உடம்பை வைத்து இருக்கும் யானை கவலைப்படாது என்று நினைத்தால், அது கூடக் கவலைப்படுகிறதே. அப்படியானால், பூமியில் இருக்கும் எல்லா உயிர்களுக்கும் ஏதாவது ஒரு கவலை இருக்கத்தான் செய்யும் போலிருக்கிறது.

கவலைப் படுவதால் வாழ்க்கை ஒன்றும் நமக்கேற்ற மாதிரி மாறப் போவதில்லை. அது மட்டுமல்லாமல் கவலைப்பட்டு, கவலைப்பட்டு நம் கண்ணெதிரே இருக்கும் ஜாலியான விடயங்களைப் பார்த்து சந்தோஷமாகக் கூட வாழ முடியாமல் போய்விட்டதே!" என்று அது புரிந்து கொண்டது.

அன்றிலிருந்து து கவலைப்படுவதை விட்டுவிட்டு, ஜாலியாக வாழத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைக்குரிய அனைத்துச் சாதனைகளும் ஊக்கத்தினாலும் இடையறாவாகவும் செய்யப்பட்டவையே - ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா முன்வைத்த கருத்தின் ஆழம் அறியுமினே!

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் சிறீதரனைச் சந்தித்தபோது சில விடயங்களை - எச்சரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

அதில் உட்கட்சி முரண்பாடுகளைக் களைந்து அடுத்த கட்ட நகர்வுகளுக்கு விரையுங்கள் என ஆலோசனை கூறியுள்ளார்.

இதேவேளை, ஏலவே யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா; தமிழ்க் கட்சிகளின் பிளவு ஆபத்தானது. அவர்களின் பிளவு வருத்தமளிக்கிறது.

தமிழ்க் கட்சிகள் மேலும் பிளவடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனக் கருத்துரைத்திருந்தார்.

இந்தியத் தூதுவர் முன்வைத்த கருத்துக்கள் மிகவும் கவனிக்கப்பட வேண்டியவை.

தவிர, தமிழ்க் கட்சிகளின் பிளவு ஆபத்தானது என இந்தியத் தூதுவர் கூறியதற்குள் நிறைந்த பொருளடக்கம் உண்டென்பதை நம்மவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது தமிழ்க் கட்சிகள் பிளவுபடுமாக இருந்தால், அந்தப் பிளவு தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

அத்தோடு தமிழ்க் கட்சிகளின் பிளவு அவர்களுக்கிடையே உள்ள ஒற்றுமையைப் பாதிக்கும்.

இதனால் தீர்வு விடயத்தில் அனைவரும் ஒருமித்த கருத்தை - கோரிக்கையை முன்வைக்க முடியாமல் போகும்.

இதனையும் கடந்து, தமிழ்த் தரப்புகள் ஆளுக்கு ஆள் கன்னை பிரிந்து நின்றால், அதனைச் சாட்டாக வைத்து தீர்வை முன்வைக்க வேண்டியவர்கள் காலம் கடத்துவர்.

அத்தோடு உலக நாடுகளும் ஈழத் தமிழர் விடயத்தில் கரிசனை கொள்வதைத் தணித்துக் கொள்ளும்.

இவையாவற்றையும் கடந்து, இன்னுமொரு பிரதான விடயம் உண்டு. அதாவது தமிழ்த் தரப்புகள் ஒன்றுபட்டு ஒற்றுமையாகத் தமது கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்பதுதான் இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு.

இந்த நிலைப்பாடு ஏற்கனவே இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே தமிழ்க் கட்சிகள் தமக்குள் ஒற்றுமைப்படாமல் தனித்தனியாக இயங்கினால், ஒரு கட்சிக்குள்ளேயே முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டால் இந்தியா எதுவும் செய்ய முடியாமல் போகும் என்ற கருத்தும் இந்தியத் தூதுவரின் எச்சரிக்கைக்குள் அடங்கியுள்ளது.

உண்மை. தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதாக இருந்தால், அதற்கான அடித்தளம் தமிழ் அரசியல் தரப்புகளிடையே ஒற்றுமையும் ஒருமித்த நிலைப்பாடும் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து ஆளுக்கு ஆள் தீர்வை முன்வைத்தால், நல்லது நீங்களே போராடி அதனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அதைச் செய்ய முடியாவிட்டால், நீங்கள் விரும்பும் தீர்வை ஒரு கடதாசியில் எழுதி உங்கள் தலையணையில் வைத்து உறங்குங்கள் என்று கூறிவிட்டு சர்வதேசம் மெல்ல விலகிக் கொள்ளும்.

இதுவே யதார்த்தம் என்ற மெய்ப்பொருள் இந்தியத் தூதுவரின் ஆலோசனைக்குள் அடக்கம் என்பதை நம்மவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# சட்டத்துக்கு முரணாக தேசிய விருதுகளை பெற்றுக்கொடுத்தால் நடவடிக்கை

## ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க

சட்டத்துக்கு முரணாக தேசிய விருதுகளை பெற்றுக்கொடுப்பவர்கள் மற்றும் அவ்வாறான கௌரவ நாமங்களைப் பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உரிய அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு சில நியதிகளின் அடிப்படையில் உரிய செயன்முறைக்கமைய தெரிவு செய்யப்படும் சிறப்புக்குரிய இலங்கை பிரஜைகளுக்காக ஜனாதிபதியால் சில விருதுகள் மற்றும் கௌரவ நாமங்கள் வழங்கப்படுகின்றன.

அவ்வாறான பெயர்களில் சில நபர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக விருதுகள், சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றமை தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்துக்கு அறியக் கிடைத்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால் தேசிய விருதுகளுக்காக பயன்படுத்தப்படும் கௌரவ நாமங்களை வேறு தரப்பினர் தவறாக பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் முறையற்ற விதத்தில் விருதுகள் வழங்கப்படுகின்றமை இதுவரையில் இலங்கையில் கௌரவிப்புக்கு பாத்திரமானவர்களுக்கு செய்யும் அநீதியாகவும் அவமரியாதையாகவும் அமைவதாக ஜனாதிபதியின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறான செற்பாடுகளுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

# தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக் குழுவை நிறுவ நடவடிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலம் மார்ச் மாத இறுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக இந்த சட்டமூலம் குறித்து விவாதம் நடத்த எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் புதிய ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும்.

ஜனாதிபதி மற்றும் அரசியலமைப்புச் சபையால் நியமிக்கப்பட்ட 11 உறுப்பினர்களை இந்த ஆணைக்குழு உள்ளடக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு

# மார்ச் மாதம் முதல் இலவச மதிய உணவு

ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மார்ச் மாதம் முதல் இலவச மதிய உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் அதிகளவான சிறுவர்கள் போஷாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார த்துறை அண்மையில் தெரிவித்திருந்தது.

இதனையடுத்தே அரசு இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

அதற்கமைய, தரம் ஒன்று முதல் ஐந்து வரை கல்வி பயிலும் 17 இலட்சம் மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படவுள்ளது.

இந்த உணவு வழங்கும் திட்டத்துக்காக 16.6 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட செயன்முறையின் அடிப்படையில், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் மேற்பார்வையில் உணவு தயாரிக்கப்படுமெனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

# ஆண்டு விழாவும் நாவலர் நினைவரங்கமும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய அறநெறிப் பாடசாலையின் ஆண்டு விழாவும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவரங்கமும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் மாணவர் மன்ற தலைவர் செல்வன் சானுராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அறநெறிப் பாடசாலையின் அதிபர் திருமதி கலா சுந்தரேசன் அவர்களின் நெறியாள்கையின்கீழ் இடம்பெறும் இந்நிகழ்வானது மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் இருந்து நாவலரது திருவுருப்படமானது ஊர்வலமாக திருமுறை பாராயண சகிதம்விழா மண்டபத்தினை அடைதலை தொடர்ந்து ஆரம்பமாகும்.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை **காலை 08:30 மணியிலிருந்து மாலை 5:00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** கார்கில்ஸ்-மானிப்பாய், கொமர்ஷல் வங்கி-மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவிலடி-மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை, மானிப்பாய் சந்தை, மேதர், மானிப்பாய் அண்ணாமலையார் ஸ்ரீராகவேந்திரா என்ரபிறைஸ், எவர் கிறீன் அச்சகம், கரிகணன் பிறைவேட் லிமிடெட், அரசடி வீதி-சீனியர் வீதி சந்தி, ஐயனார் கோவிலடி, மனோகரா நாவலர் வீதி, மாவடி, தட்டாதெரு கே.கே.எஸ் வீதி சந்தி நாவற்குழி ... மின்சாரம் தடைப்படும்.

# வடமராட்சியில் விபத்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கோரியடி பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வெற்றிலைக்கேணியில் இருந்து மருதங்கேணி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும், மருதங்கேணியில் இருந்து வெற்றிலைக்கேணி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இரு இளைஞர்களும் மருதங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதுடன் சம்பவ இடத்திற்கு வருகைதந்த மருதங்கேணி போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

10



அத்துடன் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ் சில மிகவும் குறிப்பிட்ட சொற் களஞ்சிய பண்புகளைக் கொண்டு, அதன் ஒலியியல் தனிக் கூறு தொடர்பால் ஏனைய இலங்கைத் தமிழ் பேச்சு வழக்குகளுடன் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இன்று வரை தனக்கே உரித்தான சில சொற்களையும் கொண்டுள்ளது. அத்துடன், மட்டக்களப்புத் தமிழர்கள் பேசும் தமிழ் வடமொழிக் கலப்பு மிகவும் குறைவாகவுள்ளமை, மிகப் பழைய விளிப்புப் பெயர்களையும் அசைச் சொற்களையும் கொண்டு காணப்படல் இதன் மற்றுமொரு சிறப்புக் காரணம்.

மட்டக்களப்பு என்பது தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தைக் குறிப்பதாயினும். மட்டக்களப்பு என்பது மட்டக்களப்புக்கும் திருகோணமலைக்கும் எல்லையில் அமைந்துள்ள வெருகல் கங்கையிலிருந்து, அம்பாறை மாவட்டத்தின் எல்லையாகிய குமுக்கன் ஆறு வரையுமான பரந்த பகுதி மட்டக்களப்பு என்றே அழைக்கப்பட்டது. எனவே "மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ்" என்பது தற்போதைய மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வாழும் தமிழ் பேசுவோரின் தமிழ்ப் பேச்சு வழக்காகும்.

### உச்சரிப்பு

மட்டக்களப்புப் பேச்சுத் தமிழில் சில எழுத்துகள் மாறி உச்சரிப்புக்குள்ளாகின்றன. அவை தனிச் சொற்களாகவும் பல சொற்களாகவும் மாறி ஒலிக்கின்றன.

'ன' கரமும் 'ற' கரமும் தொடர்ந்து வரும் சொற்கள் முறையே 'ண'கரமும் 'ட' கரமுமாக உச்சரிக்கப்படுகின்றன. உதாரணமாக ஒன்று -ஒண்டு என்றும் கன்று - கண்டு என்றும் கொன்று - கொண்டு என்றும் பன்றி -பண்டி என்றும் உச்சரிக்கப்படுகின்றன.

ஜகாரம் உள்ள சொற்கள் அகரமாக ஒலித்தல் உதாரணமாக வைத்து -வச்ச என்றும் பச்சை- பச்ச என்றும் ஐம்பது - அம்பது என்றும் உச்சரிக்கப்படுகின்றன.

'ஏன்' எனும் விகுதி 'அன்' ஆக மாறி மிகுந்து ஒலித்தல். உதாரணமாக வந்தேன் - வந்தன் என்றும் வருவேன் - வருவன் என்றும் படிப்பேன்- படிப்பன் என்றும் உச்சரிக்கப்படுகின்றன.

முகர ஒலி எகரமாக ஒலித்தல். உதாரணமாக வாழைப்பழம் - வாளைப்பளம் என்றும் மழை - மளை என்றும் உச்சரிக்கப்படுகின்றன.

மெல்லின மெய்யீறு குற்றுகரம் ஏற்றல் உதாரணமாக மண் - மண்ணு என்றும் பொன் -பொன்னு என்றும் உச்சரிக்கப்படுகின்றன.

ஏகார உயிர் 'ஆ', 'ஓ' என மாறி ஒலித்தல். உதாரணமாக சேவல் - சாவல் என்றும் பேடு - போடு என்றும் உச்சரிக்கப்படுகின்றன.

லகர மெய்யான ஈற்றோசை குறைந்து ஒலித்தல். உதாரணமாக மறுகால் மறுகா என்றும் இருந்தால் - இருந்தா என்றும் உச்சரிக்கப்படுகின்றன.

### மட்டக்களப்புத் தமிழ்ச்சொற்கள்

மட்டக்களப்புத் தமிழ்ச் சொற்கள் சில சொற்கள் குறிலாகவும் நெடிலாகவும் மாறுபட்டு மட்டக்களப்புத் தமிழ் உச்சரிப்பில் ஒலிக்கின்றன. சில திரிபுபட்டும் பழந்தமிழ் தொடர்பு கொண்டும் இலக்கிய ஆட்சி முறைக்கு ஏற்பவும் உச்சரிக்கப்படுகின்றன. அவ்வாறான சில பொது வழக்காற்றுச் சொற்கள் உதாரணங்களுடன் இங்கே தரப்பட்டுள்ளது.

அங்கு - அங்கால என்றும் விறகு - அசவு என்றும் நடமாட்டம் - அசப்பு என்றும் வம்பளத்தல்- ஆவலாதி என்றும் கதிரவன் எழும் திசை(கிழக்கு) – எழுவான்கரை என்றும் ஏமாந்தவன் ஏமாந்தி என்றும் எழில் -ஒய்யாரம் என்றும் எழும்பு-ஒளும்பு என்றும் துணிவு- ஓர்மை என்றும் கோவணம்- கச்சை என்றும் பெருங்கவலை கக்கிசம் என்றும் தெருவாசல் -கடப்பு என்றும் காலைநேரம்- காலமே, பேரொலி செய்து விளையாடல்- குமுதம் என்றும் மிளகாய்- கொச்சிக்காய் என்றும் பேசப்படுகின்றன.

மேலும் விறகு- கொள்ளி என்றும் தொந்தரவு-சள்ளு என்றும் காய்ந்தகுச்சி- சுள்ளி என்றும் தடவுதல்- திராவுதல் என்றும் தொல்லை-நாசமறுப்பு என்றும் வைத்தியன்- பரிசாரி என்றும் பேராசைக்காரன்- பறவாதி என்றும் கதிரவன் மறையும் திசையாகிய மேற்கு -படுவான் கரை என்றும் பெரும் உலோபி- பிசினி என்றும் வானம் கருமையாக இருத்தல்- மூசாப்பு என்றும் வைத்தியம்-வெள்ளி என்றும் உள்ளி -வெள்ளை வெங்காயம் என்றும் பாத்திரம்-ஏனம் என்றும் இயலாது- ஏலா என்றும் கொஞ்சம் - ஒள்ளுப்பம் என்றும் நடைமுறையில் பயன்படுகிறது.

### மட்டக்களப்பு பழமொழிகள்

மட்டக்களப்பு மாநிலத்தில் பாவிக்கப்படும் பழமொழிகளிலும் அப்பிரதேசத்திற்குரிய தமிழ்ப்பேச்சு வழக்கு காணப்படுகின்றது. சில பழமொழிகள் அப்பிரதேசத்திற்கே உரித்தான தனித்துவம் வாய்ந்தவை. உதாரணத்திற்குச் சில பழமொழிகள்:

ஆர்குத்தியும் அரிசானால் சரி என்பது சாதாரண வழக்கில்: யார் இடித்தாலும் அரிசி நெல்லிலிருந்து வெளியே வந்தால் சரியே என்பதாகும்.

ஐயர் வீட்டுநாய்க்கு அலியார் வீட்டுச்சோறு என்பது சாதாரண வழக்கில்: ஐயர் வீட்டுநாய் இஸ்லாமியர் வீட்டிலும் செல்லப் பிராணி என்பதாகும்.

ஓடாவி வீடு ஒட்டை வீடு என்பது சாதாரண வழக்கில்: தச்சன் வீடாக இருந்தும் அது ஓட்டையாகவே உள்ளது என்பதாகும்.

காய்ந்த மாடு கம்பில விழுந்தது போல என்பது சாதாரண வழக்கில்: பசியுள்ள ஓர் மாடு கம்பைக் (தானியம்) கண்டது போல் என்பதாகும்.

வேலிக் கட்டைக்குப் பிறந்தாலும் போடிப்பட்டம் குறையாது என்பது சாதாரண வழக்கில்: வேலிக்கட்டைக்குப் பிறந்தாலும் பண்ணையார் தகுதி குறையாது என்பதாகும்.

### தமிழ்நாட்டுடன் தொடர்புபட்ட மட்டக்களப்புத் தமிழ்ச்சொற்கள்

இலங்கையிலுள்ள தமிழ்ப்பேச்சு வழக்குகளுக்கு அப்பால் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ், தமிழ்நாட்டின் ஒரு சில பேச்சுவழக்குகளால் தாக்கம் பெறுகின்றது. இதில் குறிப்பிடத்தக்க தாக்கம் செலுத்துவது மதுரைத் தமிழ் ஆகும். மதுரைப்பேச்சு வழக்கிலுள்ள தனித்துவமான சொற்கள் இங்கேயும் பாவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. உதாரணம் எழுப்பு என்பது உசுப்பு எனப்படுகிறது.

### மட்டக்களப்பு உறவுமுறைச் சொற்கள்

ஈழத்தின் பல இடங்களில் குறிப்பாக யாழ்ப்பாணத்துத் தமிழ் வழக்கிலுள்ள சொற்கள் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழிலும் பாரிய மாறுதலற்றுக் காணப்படுகின்றது. உதாரணம் கணவன் -புருசன், மனைவி-பெண்சாதி, பொஞ்சாதி என்பவற்றைக் குறிப்பிடலாம். அண்ணன்- அண்ணா, அண்ணாச்சி, அக்கா- அக்காச்சி

சில சொற்கள் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழுக்கு உரியனவாகவும் சில யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழுக்கு உரியனவாகவும் காணப்படுகின்றன. அப்படியான சொற்கள் சில அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

### மட்டக்களப்புப் பேச்சுத்தமிழ் யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழ்

பொருள்
பொடியன் பெடியன்
சிறுவன்
பொட்டை பெட்டை
சிறுமி
பிறகு பேந்து பின்பு
பைய ஆறுதலா
மெதுவாக
டக்கெண்டு ('டக்'என்று)
கெதியா விரைவாக
வருவாங்களா?
வருவினமோ? வருவார்களா?
கிறுகி திரும்பிதிரும்பி
போயிற்றுவாறன்
போட்டுவாறன் போய்வருகிறேன்

### தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள்

மட்டக்களப்புப் பேச்சுத்தமிழ் தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களில் பாரிய வேறுபாடுகள் இல்லாதவை. யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் காணப்படும் முன்னிலைச் சுட்டுச்சொற்களான உவன், உவள், உது, உவை, உவடம், உங்கை, உந்தா ஆகிய சொற்கள் அற்றவை. இதைக் கொண்டே எப்பகுதி தமிழ் பேசுகின்றனர் என்பதை அடையாளம் காண முடியும்.

### வேற்றுமை உருபுகள்

இப்பபகுதி பேச்சுத் தமிழில் வேற்றுமை உருபுகள் சேரும் போது எழுத்துத் தமிழிலிருந்து வேறுபடுகிறது. யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழை அண்மித்தும் இப்பகுதிக்குரிய ஒலிப்பைப் பெற்று வேறுபட்டுக் காணப்படுகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ்ஸின்...

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து சிகையலங்கரிப்பு நிலையத்தில் பணியாற்றும் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானைச் சேர்ந்த ஏ.நிஷாந்தன் என்ற 29 வயதான இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் பருத்தித்துறையிலிருந்து யாழ். நோக்கி மினி பஸ்ஸில் பயணித்தவேளை நல்லூர்ப் பகுதயில் இறங்க முற்பட்ட வேளை கீழேவிழுந்த நிலையில் பேருந்தின் சில்லுக்குள் நசியுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பேருந்து நடத்துநர் மற்றும் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு குறித்த பேருந்தின் வழித்தட அனுமதியும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. (ம-7,33,60)

## சகோதரர்கள்...

சம்பவத்தில் 44 மற்றும் 45 வயதான சகோதரர்களே வாள்வெட்டுக்கு இலக்

காகியுள்ளனர்.

காயமடைந்த இருவரும் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## திருமலையில்...

பட்டுள்ள சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியானது பௌத்த விகாரைக்குரியது என்றே இவர்கள் தடுக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவடி கிராமத்தில் உள்ள மிகப்பழமையான கந்தசாமிமலை முருகன் ஆலயத்தில் மாதாந்தம் கிராம மக்களால் பௌர்ணமி தின பொங்கல் நிகழ்வு முன்னெடுக்கப்படுவது வழக்கமாக நிகழ்ந்து வரும் ஒன்றாக காண்படுகிறது.

இந்த நிலையில் நேற்று குறித்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வெருகல், மூதூர் மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சென்றிருந்தனர்.

இதன்போது அப்பகுதியில் அதிகளவிலான பொலிஸார் மற்றும் முப்படையினர் குவிக்கப்பட்டு அப்பகுதிக்குள் நுழையவிடாது பொதுமக்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இந்த பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகைதந்த சிவில் செயற்பாட்டாளர் லவகுசராசா, சமூக செயற்பாட்டாளர் நவரெத்தினராசா அஞ்சலி, ஆல்ய தலைவர் வைரமுத்து விஜயநாயகம் உட்பட அகம் அமைப்பின் அங்கத்தவர்களுக்கு எதிராக புல்மோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரியினால் தடையுத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

அத்தோடு, நிகழ்வில் கலந்து கொள்ள ஏனைய பொதுமக்களுக்கும் தடை விதிக்கப்பட்டது.

குறித்த இடம் பௌத்த விகாரைக்கு உரியது எனவும் நீதிமன்ற தடை இருப்பதன் காரணமாக எவரையும் அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்து பொதுமக்களை பொலிஸார் திருப்பி அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கச்சதீவு...

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்றத்தையடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி ஆகியன இடம்பெற்றன. திருப்பலி நிகழ்வு இன்று காலை ஒப்புக்கொடுக்கப்பட்டு திருவிழா நிறைவு பெறும்.

இத்திருவிழாவிற்கு இலங்கையில் இருந்து பெருமளவு பக்தர்கள் வருகை தந்ததுடன் குறித்த நிகழ்வில் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர்.

திருவிழாவில் இந்தியாவிலிருந்து பக்தர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதனைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள்வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதோடு கச்சதீவு திருவிழாவையும் புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வெள்ளை ஈ...

கணக்கில் உள்ள தென்னைகளை வெள்ளை ஈ தாக்கத் தொடங்கியுள்ளதால், அப்பகுதி தென்னந்தோட்ட உரிமையாளர்கள் மிகுந்த அதிர்ச்சியில் இருப்பதுடன் இந்த ஆபத்தில் இருந்து எங்ஙனம் மீள்வது எனத் தெரியாமல் அங்கலாய்க்கின்றனர். (ம)

## உயர்...

களாக யாழ்.வலம்புரி விருந்தினர் விடுதியில் (Valampuri Hotel) இடம்பெறவுள்ளது.

மருத்துவம் முதல் ஹோட்டல் முகாமைத்துவம் வரையான சகல துறைசார் கல்வி நிறுவனங்கள், தொழிற்கல்வி நிறவனங்கள், உள்நாட்டு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும் துறைசார் நிபுணர்களும் இக்கண்காட்சியில் பங்கேற்கவுள்ளனர்.

மாணவர்கள் நலன்கருதி முற்றிலும் இலவசமாக இடம்பெறும் இந் நிகழ்வுக்கு வலம்புரி நாளிதழ் ஊடக அனுசரணை வழங்கியுள்ளது. (ம-7)

## விபரீத...

யுவதியின் வீட்டிலிருந்து சடலம் நேற்று இரவு மீட்கப்பட்டது.

சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யாழ்.....

விமான நிலையத்துக்கு சென்றிருந்த இரு இளைஞர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்த 34 வயதுடையவர், மற்றையவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர்.

அதிகாலை 4.35 மணியளவில் டோஹா நோக்கிப் புறப்படவிருந்த கட்டார்வயர்வேஸின் QRR-663 விமானத்தில் பயணிப்பதற்காக அவர்கள் இருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளனர்.

முதலில் கட்டாரின் [illegible] வுக்கும், அங்கி

ருந்து பிரான்ஸின் பாரிஸுக்கும் கடைசியாக ஜெர்மனியின் மூனிச் நகருக்கும் செல்ல திட்டமிட்டிருந்தமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

## இலங்கையின்...

செயலாளர் ரிச்சர்ட் வர்மா உள்ளிட்ட குழுவினர் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை இச்சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து, துணை இராஜாங்க செயலாளர் உள்ளிட்ட குழுவினர் ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது.

அத்துடன், இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க அமெரிக்கா வழங்கிய மனிதாபிமான மற்றும் அவசர உதவிகளை அமைச்சர் அலி சப்ரி பாராட்டியிருந்தார். (ம-7)


லக்சி 7 VIP
திகதி 2024.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 0225
U 2 7 3 8 4 1 U

தன நிதானய
திகதி - 2024.02.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1429
W 06 31 64 67 W
Double Chance இலக்கம் 72426
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3641
சீட்டிழுப்பு திகதி 23.02.2024
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 36 50 51 62
G 44962
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 0708
மிதுனம் 02 13 16 57 மிதுனம்
தன யோக இலக்கம் 45989
நாளுக்கான விதி எண் 01

மஹஜன சம்பத
திகதி 2024/02/23
சீட்டிழுப்பு இலக்கம் 5399
S 5 3 3 6 4 7
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 23/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1747
U 24 31 38 54 58
33798
தொலைபேசி 0112-470462, 011-407000 www.nlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.02.2024
வெற்றி வாரம் 107
K R 4 9 5 4 6 0
29,675,248.00
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2373
வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.23
தினம் வெள்ளிக்கிழமை
13 19 32 66 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 74,282,704.80

சனிதா
திகதி 2024.02.23 வெற்றி வாரம் 4534 வர்ணம் செம்மஞ்சள்
01 10 34 46 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,737,748.00

சசிரி
வெற்றி வாரம் 445
சீட்டிழுப்பு திகதி 2024.02.23
பச்சை
01 11 24
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,739,200/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4085
வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.23
தினம் வெள்ளிக்கிழமை
21 25 31 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,260,744.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 21 18 24 34 53
1549
23.02.2024
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 507,801,450.20
DLB 011-2 333 546-47

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2199
சீட்டிழுப்பு திகதி : 2024.02.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,498,399.20
ADA KOTIPATHI
06 53 57 70 U



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## J & J. Tailors

தையல் பயிற்சி வகுப்புக்கள்
புதிய மாணவர்கள்
(பெண்கள்)
சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
தொழில் வாய்ப்பும் உண்டு.
**077 452 2224**
(19169)

மற்றுமொரு புதிய பஸ் சேவை
ஆரம்பித்துள்ளனர்
**Village Hotel Jaffna Express**
அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு
**கட்டணம் - 2700/=**
தொடர்புகளுக்கு
**077 544 8503**
(19118)

## ஆர்.ஆர் காலமானார்



(கொழும்பு)
தமிழீழ மக்கள் விடுதலைக் கழக இயக்கத்தின் மூத்த தளபதிகளுள் ஒருவரும், அதன் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் சிரேஷ்ட உபதலைவரும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் செயலாளருமானதோழர் இராகவன் அல்லது ஆர்.ஆர் (வேலாயுதம் நல்லநாதர்) நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலமானார்.(ம-7)

## கடை வாடகைக்கு

வண்ணை வைத்தீஸ்வரா சந்தியில் இரு கடைகள் வாடகைக்கு விடப்படும்.
**தொடர்புகளுக்கு :**
திருமதி Sri
**074 208 8081**
(19229)

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்புகளுக்கு :**
**077 986 5457**
(19213)

## கனடாவில் உயர்கல்வி

**குறைந்த கட்டணத்தில்**
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
**STUDY IN UK & WORK VISA**
ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு
நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்
**WEC COLLEGE**
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
Whatsapp: 0094779265447
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி
(19252)

## காணி விற்பனைக்கு

புலோப்பளை பளையில் காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்புகளுக்கு :**
**076 56 47 848**
(19238)

## DISH ANTENNA TECHNICIANS தேவை

கொழும்பில் இயங்கிவரும் SATELLITE மற்றும் கேபிள் டி.வி உபகரணங்கள் விற்பனை மற்றும் சர்வீஸ் செய்யும் கடைக்கு டிஷ் ஆன்டென்னா பிட்டிங் செய்யக்கூடிய மற்றும் ELECTRONICS TECHNICIANS தேவை.தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய இருவர் தேவை. உணவு தங்குமிடம் மற்றும் திறமைக்கு எற்ப சம்பளம் மற்றும் மேலதிக வேலைக்கான கொடுப்பனவுகள் கிடைக்கும், உடன் தொடர்புகொள்ளவும்.
**ராஜன் 077 771 0785**
(19223)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குலத்தைச் சேர்ந்த 1986 இல் பிறந்த 7 இல் செவ்வாய் உள்ள அனுஷ நட்சத்திரம் கி.பாவம் 50 உடைய சொந்த வாகன பிஸ்னஸ் சொத்துள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
**077 986 5957**
(19201)

## காணிகள், வீடுகள் வாங்கவும் விற்கவும்

இலங்கையின் சகல இடங்களிலும் காணி, வீடு வாங்கவும் விற்கவும் சந்தைப்படுத்தல் விலைக்கு கொடுத்தும் வாங்கியும் தரப்படும்.
பலாலி வீதியில் 4 பரப்பு 16 குளி, 2 பரப்பு 8 குளி, 1 பரப்பு 13 குளி, 2 பரப்பு 8 குளி, 5 பரப்பு 10 குளி, 3 பரப்பு, 3 பரப்பு, 5 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.
இன்னும் பல காணிகள்,
கடைகள், வீடுகள் உண்டு.
நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
**ராஜா சொத்து விற்பனை நிலையம்**
**077 60 33 259**
**M.G.R**
(19247)

## திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு அருகாமையில் நேர்முன்பாக உள்ள 5 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.
**076 206 1703**
(19241)

## விவசாயிகளுக்கு

இந்தோனேசியாவிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி 17 லீற்றர் (Sprayer) சில்வர், பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவியினை உத்தரவாதத்துடனும் விசேட விலைக்கழிவுடனும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
**"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"**
(19243)

**ஆர்க் . என் . கம்பனி**
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9, வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020




Hotline : 071 535 7799/ 071 973 9917

## Show Money

விசா பெற்றுக்கொள்வதற்காக சகல நாடுகளுக்கும் Show money வசதி செய்து கொடுக்கப்படும்.
**074 173 7684**
(19242)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை நல்லநாதன்

தோற்றம் : 09.08.1935
மறைவு : 18.02.2024

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் Canada Toronto வை வசிப்பிடமகவும் கொண்ட வேலுப்பிள்ளை நல்லநாதன் அவர்கள் கடந்த 18.02.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி வேலாயுதபிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான எட்வின் சின்னப்பு - றேபேக்கா பூரணம் தங்கராஜா தம்பதியரின் பாசமிகு மருமகனும் சத்தியவதி நல்லநாதன் (மணி) அவர்களின் அன்புக் கணவரும் ரஞ்சனி (லண்டன்), சாந்திகுமார் (கனடா), ஜீவா (ஜேர்மனி), சுபாஷினி (சுட்டி - லண்டன்), மகிந்தா (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜனார்தனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாமுவேல் கிறிஷ்ணசாமி, மல்லிகா, பாஸ்டர் அழகேந்திரன், காலஞ்சென்ற பிலிப்பு போல் வில்சன், மாகிறேட் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான வடிவேற்கரசர், வைகுந்தநாதன், பராசக்தி, தையல்நாயகி, அருந்ததிநாயகி, நீலாம்பிகை, உலகநாதன் (லண்டன்), அருமைநாதன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். (19228)

தகவல்:
குடும்பத்தினர்
**வே.அருமைநாதன்** (இலங்கை) - **076 669 5807**

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8404)

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.
சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
**0777068777**
(C-8404)

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 267 /= | |
| 1 Kg அரிசி மா | - 196 /= | |
| 1 Kg Prima கோதுமை | - 188 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 294 /= | |
| 1 Kg றவை | - 285 /= | |
| 1 Kg தீட்டல்பச்சை அரிசி | - 168 /= | |
| 10 Kg விஜிதா ஆட்டக்காறி | - 1940 /= | |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 365 /= | ~~450/=~~ |
| 180g Protinex | - 1799 /= | ~~2000/=~~ |
| 70g Baby Soap | - 112 /= | ~~145/=~~ |
| 01 Lux Soap | - 145 /= | ~~175/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140 /= | ~~175/=~~ |
| 425g Supiri ரின்மீன் | - 480 /= | ~~650/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50 /= | ~~80/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - 440 /= | ~~480/=~~ |

**1065/=**



~~1080/=~~
**Max - 02**
(19253)

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபன[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.